


**31. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் உயிரி பன்முக தன்மையை பாதுகாத்து இயற்கை சூழலை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. 2026-27ஆம் நிதியாண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நாளை மக்களவையில் தாக்கல் செய்கிறார்.

3. உற்பத்தி துறை வேலை வாய்ப்பில் நாட்டிலேயே தமிழகம் முதலிடம் வகிப்பதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தைபூசத்தை ஒட்டி வடலூர் சத்திய ஞான சபையில் ஆறு கால ஜோதி தரிசனம், நாளை காலை தொடங்குகிறது.

5. இந்திய – நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 5ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர்

நாட்டின் உயிரி பன்முக தன்மையை பாதுகாத்து அத்யாவசிய இயற்கை சூழலை மேம்படுத்துவதில் அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பீகார், உத்திரபிரதேசம், குஜராத் மாநில பறவைகள் சரணாலயங்கள், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த வரையறுக்கப்பட்ட

ஈர நிலங்கள் பட்டியல் குறித்து சமூகவலைதளத்தில் பிரதமர் வெளியிட்ட செய்தியில் சதுப்பு நில பாதுகாப்பிற்கான இப்பகுதி மக்களின் ஆர்வத்தை பாராட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு மற்றும் எண்ணற்ற வலசை பறவைகளின் பாதுகாப்பான வாழ்வியலை உறுதிசெய்ய இத்தகைய முயற்சிகள் வழிகோலுவதாகவும் பிரதமர் கூறினார்.

*************

நிதி நிலை அறிக்கை

மக்களவையில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், 2026-27ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நாளை தாக்கல் செய்கிறார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் திருமதி நிர்மலா சீதாராமன் தொடர்ந்து 9ஆவது முறையாக பட்ஜெட்டை சமர்ப்பிக்க உள்ளார்.

பட்ஜெட் தாக்கலுக்கு பின்னர் நிதி, பொருளாதாரம், ஆளுமை, ஜனநாயக நடைமுறைகள் உள்ளிட்டவற்றுடன் தேச கட்டமைப்பில் இளையோர் பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் கல்லூரி மாணாக்கருடன் நிதியமைச்சர் கலந்துரையாடுகிறார்.

முதல்முறையாக ஞாயிற்றுக்கிழமை பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் நிலையில் மும்பை தேசிய பங்கு சந்தையில் நாளை சிறப்பு வர்த்தகம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தீப்பெட்டி தொழில்துறையினரின் மூலப்பொருட்கள் மற்றும் காகித அட்டை மீதான சரக்கு சேவை வரி குறைப்பு, எரிபொருள் விலையேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கான மானியங்கள், சிறு குறு நிறுவனங்களுக்கு எளிய கடன் வசதிகளை எதிர்பார்ப்பதாக சாத்தூர் திப்பெட்டி உற்பத்தியாளர் சங்க தலைவர் லட்சுமணன் தெரிவிக்கிறார்.

............வாய்ஸ்

விவசாய இடுபொருட்களுக்கான மானியம், பேரிடர் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளுக்கான இழப்பீடுகளை அதிகரிப்பது உள்ளிட்ட

அறிவிப்புகளை இந்த நிதிநிலை அறிக்கையில் எதிர்நோக்கியிருப்பதாக தஞ்சை மாவட்ட விவசாயி தெரிவிக்கிறார்.

.... வாய்ஸ் .........

*************

பியூஷ் கோயல்

இந்தியா - ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வர்த்தகம் ஒப்பந்தத்தினால் அடுத்த ஐந்தாண்டுகளில் நம் நாட்டின் ஏற்றுமதி இரு மடங்காக அதிகரிக்கும் என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு,பியூஷ்கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வணிகர்கள், வர்த்தகர்கள், சிறு குறு நடுத்தர தொழில்முனைவோர், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தங்களது கவனத்தை சர்வதேச அளவில் நிலை நிறுத்துவதன் அவசியத்தையும் தமது சமூகவலைதளத்தில் வலியுறுத்தியுள்ளார்.

நம் நாட்டின் நுட்பமான பிரிவுகளை பாதுகாக்கும் அதேவேளையில் மிகப்பெரிய வாய்ப்புகளுக்கான திறவுகோலாக இந்த உடன்படிக்கை திகழ்கிறது என்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் பிரிவுகளிலும், நாட்டின் வளர்ச்சி பாதையிலும் இந்த ஒப்பந்தம் மாபெரும் மாற்றங்களை கொண்டுவரும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஒப்பந்தம் விரைந்து நிறைவேற பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தன்னம்பிக்கையையும் வழிகாட்டுதலையும் திரு.பியூஷ்கோயல் எடுத்துரைத்தார்.

*************

அரபு மாநாடு

2ஆவது இந்திய – அரபு வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு புதுதில்லியில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக அரபு நாட்டின் வெளியுறவு அமைச்சர்கள் ஏற்கனவே இந்தியா வந்துள்ள நிலையில், ஓமன்

வெளியுறவு அமைச்சர் திரு. பதிர் அல்புசைதி இன்று டெல்லி வந்தடைந்தார்.

இந்தியா ஓமன் இடையே பன்முக அரசியல் நட்புறவும், ஒத்துழைப்பும் மேலும் மேம்படும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவு அமைச்சர் கலீஃப்பா ஷாஹீன் இன்று புதுதில்லி வந்தார்.

90 லட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளியினர் அரபு நாடுகளில் வசிக்கும் நிலையில் உணவு, நிதி, சுகாதாரம், கல்வி தகவல் தொழில்நுட்பம் புத்தாக்க எரிசக்தி, ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், கட்டமைப்பு திட்டங்களில் இந்நாடுகளுடனான இந்தியாவின் நட்புறவு தொடர்ந்து மேம்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

*************

நீட் கலந்தாய்வு

முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான 3-ஆவது கட்ட நீட் கலந்தாய்வு தொடங்கியுள்ளதாக சுகாதார சேவைகளுக்கான தலைமை இயக்குனரகம் அறிவித்துள்ளது.

புதிய பதிவுகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளதோடு, கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்டு, தகுதி வாய்ந்தவர்களுக்கு அதிக வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

மேல் விவரங்கள் மருத்துவ கலந்தாய்வு குழு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

*************

முதலமைச்சர்

உற்பத்தி துறை வேலை வாய்ப்பில் நாட்டிலேயே தமிழகம் முதலிடம் வகிப்பதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில் 162 கோடி ரூபாய் மதிப்பிலான சட்டக்கல்லூரி, வேளாண் கல்லூரி, கூட்டுக்குடிநீர் திட்டம் உள்ளிட்டவற்றை தொடங்கிவைத்து பேசிய அவர், 100 நாள் வேலை திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்..

மகளிர் வேலை வாய்ப்பு பெருக்க திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிட்டதை சுட்டிக்காட்டினார்.

கடந்த ஐந்தாண்டுகளில் மாநிலத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு முன்னோடி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

முன்னதாக பல்வேறு துறைகளின் கண்காட்சி அரங்குகளை பார்வையிட்ட முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு வாகனங்கள் உட்பட 2 ஆயிரத்து 872 கோடி ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

*************

சிவசங்கர்

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் சிறப்பு கல்வி திட்டங்களால் உயர்கல்வி பயில்வோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் கால்நடை பராமரிப்பு துறை அலுவலக கட்டட பணிகளை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், மூன்றரை கோடி ரூபாய் மதிப்பில் இந்த அலுவலகம் கட்டமைக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியை தொடர்ந்து 16 கல்லூரிகளை சேர்ந்த ஆயிரத்து 297 மாணாக்கருக்கு மடிகணினிகளை வழங்கிய அமைச்சர் இவற்றை முறையாக பயன்படுத்தி முன்னேற அறிவுறுத்தினார்.

*************

தேர்தல் ஆணையம்

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் கூடுதல் ஆவணங்களை அளிப்பதற்கான கால அவகாசம் அடுத்த மாதம் 10 ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாத தகுதியுடைய வாக்காளர்கள் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*************

ஹஜ்

தமிழகத்திலிருந்து நடப்பாண்டு ஹஜ் புனித பயணம் மேற்கொள்ள விரும்பும் இஸ்லாமிய பக்தர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப விமான முன்பதிவு செய்வதற்கு நாளைக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்குமாறு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு தெரிவித்துள்ளது.

*************

பழனி – வாய்ஸ்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தைப்பூசத் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாண உற்சவம் இன்றுமாலை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

....... வாய்ஸ் .......

*************

கோவில்

கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி அருள்மிகு பூதலிங்கசாமி திருக்கோவில் தை தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

மாநில அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் தேரை வடம்பிடித்து தேரோட்டத்தை துவக்கிவைத்தார்.

ஏராளமான பக்தர்கள் தேரோட்டத்தை தரிசித்தனர்.

*************

சத்திய ஞான சபை

கடலூர் மாவட்டம் வடலூர் சத்திய ஞான சபையில் தைபூச ஜோதி தரிசனம் நாளை காலை 6 மணிக்கு தொடங்குகிறது.

தொடர்ந்து மணி 10, பிற்பகல் 1 மணி இரவு 7 மணி, 10 மணி, மறுநாள் காலை ஐந்தரை மணி என ஆறு காலங்களில் 7 திரைகள் நீக்கி நடைபெறும் ஜோதி தரிசனத்தை காண்பதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடலூர் வந்துள்ளனர்.

தைபூச ஜோதி தரிசனத்தை ஒட்டி தெற்கு ரயில்வே சார்பில் கடலூர் குறிஞ்சிபாடி வடலூர் ஊத்தங்கால் விருதாச்சலம் தடங்களில் நாளை முதல் வரும் 3ஆம் தேதிவரை சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

*************

திருவாரூர் - வாய்ஸ்

திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தில் 2026-27 ஆம் ஆண்டு இளநிலை படிப்புகளில் சேர்வதற்கான க்யூட் பொது நுழைவுத்தேர்விற்கு விண்ணப்பிக்க சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

……….. வாய்ஸ் ………

*************

கிரிக்கெட்

இந்திய – நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 5ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 3 போட்டிகளில் வெற்றி பெற்று இந்தியா ஏற்கனவே தொடரை கைப்பற்றியுள்ளது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது